[1993 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 407, திரு. காஞ்சி பன்னீர்செல்வம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

407—

காஞ்சீபுரம்-செங்கல்பட்டு இருவழி இரயில் பாதை.

*16344—திரு. காஞ்சி பன்னீர்செல்வம் :
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்திற்கும் செங்கல்பட்டிற்கும் இடையே இருவழி இரயில்பாதை அமைக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரத்திற்கும் செங்கல்பட்டிற்கும் இடையேயுள்ள மீட்டர்கேஜ் இரயில்பாதை குறைந்த அளவில் பயன்படுத்தப் படுகிறது. மேலும், இந்த இரயில் பாதையை இருவழி இரயில் பாதையாக்குவதற்கு போதுமான போக்குவரத்து இல்லையெனத் தென்னக இரயில்வேப் பொது மேலாளர் தெரிவித்துள்ளார். எனவே, இதுபற்றி மத்திய அரசை வற்புறுத்த அவசியம் இல்லை எனக் கருதப்படுகிறது.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்திலே நான் உறுப்பினராக இருக்கின்ற நேரத்திலே இந்த செங்கற்பட்டு-காஞ்சிபுரம், காஞ்சிபுரம்— அரக்கோணம் என்று இரண்டிற்கும் இரு வழிப் பாதை அமைக்கவேண்டும் என்றும், அதிலே குறிப்பாக துரித ரெயில்வே பாதை அமைக்கவேண்டும் என்று நான் அங்கே உரையாற்றி, அதற்கு பின்னாலே அன்றைக்கு மத்திய ரெயில்வே அமைச்சராக இருந்த திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களிடம் தனியாக நான் ஒரு கடிதத்தைக் கொடுத்த நேரத்திலே கூட அவர் உடனடியாக தென்னக ரெயில்வேயிக்கு பரிந்துரை செய்து எனக்குக்கூட ஒரு கடிதம் வந்திருக்கிறது. அந்த கடிதத்திலே உங்களுடைய கோரிக்கை பரிசிலிக்கப்படும் என்று கூட தென்னக ரெயில்வே மூலமாக கடிதம் அன்றைக்கு வந்திருக்கிறது. அந்த கடிதம் கூட என்னிடத்திலே இருக்கிறது. எனவே மாநில அரசு இந்த இருவழிப் பாதையை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது கடிதம் எழுதியதாகவும், அதற்கு மத்திய அரசிடமிருந்து கடிதம் வந்திருப்பதாகவும் சொன்னார்கள். அதுபோன்ற குறிப்புகள் அரசிடத்திலே இல்லை. அந்த கடிதங்களை தருவார்களேயானால் மீண்டும் இந்த தமிழக அரசு இதை பரிந்துரை செய்து ரெயில்வே வாரியத்திற்கு மீண்டும் அதை நினைவூட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 408, திரு. ஆ. சுப்புரத்தினம், இருக்கையில் இல்லை.

வினா எண் 409, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

409—

முடங்கியார் பகுதியில் துணை மின் நிலையம் அமைத்தல்.

*11406— திரு. தி. சாத்தையா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தொகுதி, முடங்கியார் பகுதியில் 110/11 கே. வி. துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) துணை மின் நிலையம் அமைப்பதற்காக தேவைப் படும் நிலத்தைக் கையகப்படுத்தும் பணி நடந்துகொண்டிருக் கிறது. நிலத்தைக் கையகப்படுத்தியவுடன் அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ராஜபாளையம் தொகுதியில் கடந்த 3, 4 ஆண்டுகளாக பவர் பொசிசன், பவர் டிப் இருப்பதால் அந்த ஏரியாவில் குடிதண்ணீர் சப்ளை செய்யும் எலக்ட்ரிகல் மோட்டார்கள், கிட்டத்தட்ட ஒவ்வொரு சமயத்திலே 110-க்குக் கீழே வந்துவிடுகிறது. 220 வோல்ட் இருக்கவேண்டிய இடத்தில் 101க்கு குறைந்துவிடுவதால் மோட்டார் கரண்ட் அதிகமாகி நிறைய எலெக்ட்ரிகல் மோட்டார்கள் ஒயிண்டிங் கெட்டு பழுதடைந்துவிடுகிறது. அதனால் குடி தண்ணீர் சப்ளை பாதிக்கப் படுகிறது. இந்த நிலையில் இந்த மின் நிலையம் 1992, 1995,